
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1002**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

**86**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




## காஞ்சியில் கருத்துச் சோலை!

செங்கல்பட்டு மாவட்ட தி.மு.கழக முதல் மாநாடு டிசம்பர் 23, 24 1950-இல் காஞ்சி தர்கா மைதானத்தில் அமைக்கப்பட்ட மு.அரங்கசாமி பந்தலில் நடைபெற்றது. நகரின் நடுவே தொட்டில் போல ஒரு அழகிய பந்தல், முகப்பிலே இரண்டு நுழைவாயில்கள். ஒருபக்கம் பட்டுக்கோட்டை அழகிரி தோற்றம் கம்பீரமாக காட்சி தர, மற்றொரு வாயிலில் விவசாயக் குடும்பம் ஒன்று கழகக் கொடியை ஏந்தியவாறு, நிற்கும் தோற்றம். மாநாட்டுப் பந்தலுக்குள் நுழையும் முன்பு, காலஞ்சென்ற மு.அரங்கசாமியின் படம் அனைவரையும் வரவேற்றது.

நகர் முழுவதும் கழகக் கொடிகள் பறந்தன. இலட்சிய முழக்கங்கள் எழுதப்பட்ட துணிகள் ஆங்காங்கே தொங்கவிடப்பட்டிருந்தன. மாநாட்டுப் பந்தலுக்குள் தி.மு.கழகத்தினருக்கு மட்டுமல்லாமல் ஆதரவாளர்களுக்கும் தனி இடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வரவேற்பாளர், பிரதிநிதிகள், பார்வையாளர்கள் என எல்லோருக்குமான இருக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. பந்தல் முழுவதும் பொன்மொழிகள் எழுதி தொங்கவிடப் பட்டிருந்தன. பந்தலைச் சுற்றியும் அன்றைய ஆட்சியாளர்களைப் பற்றிய கருத்துகள், ஆராய்ச்சிகளின் வளர்ச்சியை விவரிக்கும் சித்திரங்கள் தீட்டப்பட்டு இருந்தன.

மேடையில் கட்டபொம்மன், வ.உ.சி., பெர்னாட்ஷா, மா-சே-துங் போன்ற தலைவர்களின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. முதல் நாள் காலையில் காவே முருகேசன், சேலம் குகை கே.பி.வரதராசன், சம்பத்குமார், லிங்கதாசன் ஆகியோரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. மாநாட்டுத் தலைவர் சி.பி.சிற்றரசு பந்தலுக்கு முன்பாக கொடியேற்றினார். கே.ஆர்.முத்து இன்னிசைப் பாடல்கள் பாடினார். மாலையில் நாகூர் ஹனிபா, எம்.எம்.மாரியப்பாவின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. இரவில் பேரறிஞர் அண்ணா, கே.ஆர்.இராமசாமி நடித்த 'சந்திரமோகன்' நாடகம் நடைபெற்றது.

இரண்டாவது நாளில் கலைஞர், கா.அப்பாதுரை, இராமாமிர்தம் அம்மையார், ஏ.கே.வேலன், கண்ணதாசன், என்.எஸ்.இளங்கோ, கே.ஏ.மதியழகன், காஞ்சி கல்யாண சுந்தரம், நாவலர் நெடுஞ்செழியன், என்.வி.நடராசன், சேலம் சித்தையன், சத்தியவாணி முத்து ஆகியோர் தனித்தனி தலைப்புகளில் உரையாற்றினர். இறுதியில் அண்ணா பேருரை ஆற்றினார்.

'மூன்றாவது உலகப் போருக்கான அறிகுறிகள் கண்டு கவலையுறுவதுடன், அது தவிர்க்கப்பட வேண்டும், உலக சமாதானத்துக்கான முயற்சிகளில் ஈடுபட இந்திய சர்க்கார் தயங்கக்கூடாது, நூல் விநியோகத்தைச் சீராக்க வேண்டும், உணவுப் பஞ்சத்தைத் தீர்க்க வேண்டும், வகுப்புவாரி உரிமையை நிலைநாட்ட அரசியல மைப்பைத் திருத்தவும் தயங்கக்கூடாது, சாதிப் பெயர்களைத் தாங்கி நிற்கும் பதாகைகளைக் கொண்ட உணவ கத்துக்கு லைசன்ஸ் தரக்கூடாது, பேச்சுரிமை-எழுத்துரிமை தடைகளுக்குக் கண்டனம், செங்கல்பட்டு மாவட்டத்துக்கு நீர்ப்பாசன வசதி வேண்டும், தெற்கு ரயில்வேயில் 11,000 வடவருக்கு வேலை தருவதற்கு கண்டனம்' உள்ளிட்ட 11 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டின் இரண்டு நாட்களிலும் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். பந்தலுக்கு வெளியேயும் பல நூற்றுக்கணக்கானோர் திரண்டிருந்தனர். மாநாடு குறித்து 'திராவிட நாடு' இதழில் எழுதிய அண்ணா, 'காஞ்சி மாநாடு ஒரு கருத்துச்சோலை. உண்மை வீரர்களால் எதையும் உருவாக்க முடியும் என்ற காட்சிச் சித்திரம்! வளர்ந்து வரும் நமது கழகத்திற்கு மக்கள் காட்டும் மதிப்பின் சின்னம்' என எழுதினார்.

ஆம், தி.மு.கழகத்தின் எழுச்சியை, வளர்ச்சியை மக்கள் கண்கூடாக காணும் வாய்ப்பாக அமைந்தது செங்கை மாவட்ட முதல் மாநாடு.

**...கூட்டம் திரளும்**

## அரசமைப்பும், தேசியக் கொடியும் ஆர்.எஸ்.எஸ்.க்கு ஆகாது!



மகாராஷ்டிராவில் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு எதிராக நடைபெற்ற மிகப்பெரிய மக்கள் திரள் ஆர்ப்பாட்டம், முற்போக்காளர்கள் மத்தியில் நம்பிக்கை அளித்துள்ளது.

மகாராஷ்டிராவின் அவுரங்காபாத்தில், அரசு பொறியியல் கல்லூரியில் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் சேர்க்கைக்கு அக்கல்லூரி நிர்வாகம் அனுமதித்துள்ளது. அதற்கு எதிராக, அம்பேத்கரிய அமைப்பினைச் சேர்ந்த மாணவர்கள் குரல் கொடுத்துள்ளனர். இதையடுத்து, எதிர்ப்பு தெரிவித்த மாணவர்களை காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து கைது செய்துள்ளனர். இந்த விஷயத்தில் ஆர்.எஸ்.எஸ். எழுத்துபூர்வமாக எந்தப் புகாரும் அளிக்கவில்லை என கூறப்படுகிறது.

இதையடுத்து, ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு ஆதரவாகச் செயல்படும் காவல்துறையைக் கண்டிக்கும் விதமாக, ஆர்.எஸ்.எஸ். அலுவலக வாசலிலேயே மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்துக்கு அம்பேத்கரிய அமைப்புகள் திரண்டன. அம்பேத்கரின் கொள்ளுப் பேரன் சுஜத் அம்பேத்கர் தலைமையில் வஞ்சித் பகுஜன் அகாடி (VBA) அமைப்பு இந்தப் பேரணியை நடத்தியது.

அரசியலமைப்பு சட்டப் புத்தகத்தையும், தேசியக் கொடியையும் ஏந்தியவாறு இந்தப் பேரணி நடைபெற்றது. தடுத்த காவல்துறை அதிகாரிகளிடம், தங்கள் கையிலுள்ள தேசியக் கொடியையும் அரசியலமைப்புப் புத்தகத்தையும் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களிடம் கொடுக்க வந்ததாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட பாசிச இந்துத்துவா சக்திகளை எதிர்ப்பவர்களுக்கு புதிய நம்பிக்கையை, இந்த எழுச்சி ஏற்படுத்தி உள்ளது என சமூக வலைதளங்களில் கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன. ஆர்.எஸ்.எஸ். க்கு மூவர்ண தேசியக் கொடியும், அரசமைப்பு சட்டமும் எட்டிக்காய் என்பதை அறிந்து, அதைக் கொடுக்க முன்வந்தது, போராட்டத்தின் திசையைக் காட்டுகிறது.

## ஃப்ளாஷ்பேக்





த.சுந்தர்

### பேராசிரியர் பகிர்ந்த நினைவு!

2018-ஆம் ஆண்டு சென்னையில், நம் இனமானப் பேராசிரியர் அவர்களை எங்கள் மாவட்டச் செயலாளர் கே.எஸ்.மூர்த்தி அவர்களுடன் சென்று சந்தித்து வாழ்த்துப் பெற்ற போது எடுத்த படம். பேராசிரியர் அவர்கள் மொழிப்போர்த் தியாகி பரமத்தி - வேலூர் முஸ்தபா குறித்து விசாரித்து, நினைவுகளைப் பகிர்ந்துக் கொண்டார். பேராசிரியருடன் செலவழித்த நிமிடங்கள், வரலாற்றுத் தருணங்கள்.

**- த.சுந்தர், இளைஞர் அணித் துணை அமைப்பாளர், நாமக்கல் மேற்கு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பகம்

கௌதம் ராஜ்

**86**

**சுயமரியாதை-சமத்துவம்- சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




## சாதி விடுதலை கையேடு!

சர்வதேச அளவில் சாதி பற்றிய உரையாடல்களும் புரிதல்களும் சாதிக்கு எதிரான குரல்களும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன. சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்க எழுத்தாளர் *Isabel Wilkerson*, '*Caste The Origin of our Discontents*' என்றொரு நூலை எழுதி இருந்தார். சாதி பற்றிய உரையாடலை, இந்நூல் நிறவெறியோடு ஒப்பிட்டு வேறொரு தளத்துக்கு இட்டு சென்றது. *Oxford india Short Introduction series*-இல் *Surinder S.Jodhka*- வின் சாதி குறித்தான நூலும் இந்த வகையில், முக்கியத்துவம் வாய்ந்தது எனலாம். இந்த நூல்கள் எல்லாம் சாதி பற்றிய அறிமுகத்தை அல்லது சர்வதேச அளவில் நடந்த ஒடுக்குமுறைகளுடனான ஒரு ஒப்பீட்டை ஏற்படுத்தும் அளவிலேயே அமைந்திருக்கும்.

இவற்றில் இருந்து சற்று விலகி சாதியின் சிக்கலையும் அது அகம் சார்ந்து ஏற்படுத்தும் வடுக்களையும், சாதியை எதிர்கொண்டு அதிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளையும் தலித் பெண்ணிய பார்வையில் இருந்து பேசும் நூல் தேன்மொழி சௌந்தரராஜன் எழுதி இருக்கும் '*The Trauma of Caste: A Dalit Feminist Meditation on Survivorship, Healing, and Abolition*'. இந்த நூல் ஆசிரியருக்கு, தமிழ்நாடு அரசின் இந்த ஆண்டுக்கான 'வைக்கம் விருது' அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உளவியல் ரீதியாக சாதி உண்டாக்கும் வடு (*Trauma*) என்பது மிக மோசமான விளைவுகளை மனிதனுக்குள் ஏற்படுத்தவல்லது. அதுவும் ஒடுக்கப்பட்ட பின்புலத்தில் இருந்து வரும் ஒருவர் தலைமுறை தலைமுறையாக சாதியால் வஞ்சிக்கப்படுகிறார். அவருக்கு முந்தைய தலைமுறையின் வடுவையும் சேர்த்து அவர் சுமக்க வேண்டியுள்ளது. இதிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள, அவர் சுதந்திரத்தைத் தேடி அலைய வேண்டியுள்ளது. ஆன்மிக ரீதியாக ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மனிதர்களுக்கு, அதே ஆன்மிக ரீதியிலான தீர்வுகள் நிம்மதியைத் தரவல்லது என்கிறார் இந்நூல் ஆசிரியர். பண்டிதர் அயோத்திதாசர், அண்ணல் அம்பேத்கர் போன்ற தலைவர்களின் பௌத்தம் சார்ந்த ஆன்மிகத் தேடலும் மதமாற்றமும் இக்கூற்றுக்கு வலுசேர்க்கின்றன.

இந்நூலில் பயன்படுத்தப் பட்டுள்ள வார்த்தை பிரயோகங்கள் சாதி சார்ந்த உரையாடலில் முக்கியமானவை, *Caste System* (சாதி அமைப்பு) என்பதற்கு பதில் *Caste Apartheid* (சாதி வெறி) என்ற வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது. அதைப் போலவே சாதி ஒழிப்புக்கு இணையான ஆங்கில வார்த்தையாக *Caste Abolition* என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். சாதியை மொத்தமாக ஒழிக்கவேண்டும் என்பதுதான் இதன் அர்த்தம். *Annihilation* என்ற சொல்லைவிட *Abolition* என்ற சொல் பொருந்திப் போகிறது. இவை எல்லாம் கறுப்பின விடுதலை இயக்கத்துடனான தொடர்பால் உருவானவை என்பது தெளிவு.

இந்நூல் ஒரு உரையாடலை வாசகருடன் நிகழ்த்துகிறது, அந்த உரையாடல் தலித் பெண்ணியர் ஒருவரது பார்வையில் இருந்து வெளிப்படுகிறது. இவ்வுரையாடல் யாரையும் அந்நியப்படுத்தவில்லை. ஒடுக்குபவரும் ஒடுக்கப்படுபவரும் சேர்ந்துதான் சாதியை முற்றிலுமாக அழித்தொழிக்க முடியும் என்ற பார்வையை ஆழமாகப் பதிவு செய்கிறது. இது எந்தத் தனிநபரையும் எதிராக நிறுத்தாமல் சாதியையும் அதன் மூலம் ஏற்படும் கொடுமைகளையும் மானுட நேயத்துக்கு எதிராக நிறுத்துகிறது.

**...வாசிப்போம்.**

## நல்வருக

### படி அரிசி வாக்குறுதியை நிறைவேற்றிய அரசு!

1967-ஆம் ஆண்டு, மார்ச் 3-ஆம் தேதி கழக ஆட்சி அமைந்தது. தி.மு.க ஆட்சிக்கு வந்தால், ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் கொடுத்த, வாக்குறுதி நிறைவேறும் வரை அமைச்சர்கள் சம்பளம் பெற மாட்டார்கள் என்றும் அறிவித்தார் பேரறிஞர் அண்ணா. கொடுத்த வாக்குறுதியின் படி, ஒரு படி அரிசி 15-5-67 முதல் பங்கீட்டுக் கடைகளில் ஒரு ரூபாய் வீதம் விற்பனை செய்யப்பட்டது. அமைச்சர்களும் 16-5-67 அன்று முதல் தங்கள் சம்பளத்தைப் பெற்றார்கள்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131